**தலைமை நீதித்துறை நடுவர் நீதிமன்றம், திருவள்ளூர்**

**முன்னிலை : திரு.இரா. வேலரஸ்** B.Sc., B.L., L.L.M.,
தலைமை நீதித்துறை நடுவர்
திருவள்ளூர்

2023ஆம் வருடம், ஆகஸ்ட் மாதம் 8ஆம் நாள் செவ்வாய்க்கிழமை

**சிறு பட்டிகை வழக்கு எண்.868/2023**

**Summary Trial Case No.868/2023**

**(CNR No.TNTR1B0101222022)**

தமிழ்நாடு அரசுக்காக
உதவி இயக்குநர்
தொழிலக பாதுகாப்பு மற்றும் சுகாதாரம்
எண்.6/11 & 6/12, 2வது தளம்,
லால்பகதூர் சாஸ்திரி தெரு,
பெரியகுப்பம், திருவள்ளூர். ......குற்றமுறையீட்டாளர்

// எதிர் //

சிட்டிபாபு வெங்கடேசன் (வயது.59)
த/பெ. சிட்டிபாபு
உரிமையாளர் மற்றும் மேலாளர்
Padmashree Granites (TVR-URF)
எண்.16, கொள்ளாபிரியம்மன் கோயில் தெரு,
பாரிவாக்கம், சென்னை 600 056. ......எதிரி ...

இவ்வழக்கு 15.03.2023 அன்று இந்நீதிமன்றக் கோப்பில் எடுக்கப்பட்டு, இறுதியாக 05.08.2023 அன்று விசாரணைக்கு வரப்பெற்று, புகார்தாரர்/அரசு தரப்பில் அரசு கூடுதல் குற்றத்துறை வழக்குரைஞர் அவர்கள் ஆஜராகியும், எதிரி தரப்பில் வழக்கறிஞர் Mr. R. ஜெயகுமார் அவர்கள் ஆஜராகியும், இரு தரப்பு வாதங்களைக் கேட்டறிந்தும், புகார்தாரர் / அரசு

R VELARAS Digitally signed by R VELARAS Date: 2023.08.08 16:47:22 +0530

தரப்பில் முன்னிடப்பட்ட வாய்மொழி மற்றும் ஆவண சாட்சியங்களை பரிசீலனை செய்தும், இதுநாள்வரை இந்நீதிமன்றத்தின் பரிசீலனையிலிருந்து வந்த இவ்வழக்கில் இன்று இந்நீதிமன்றம் வழங்கும்...

## தீர்ப்புரை

எதிரி பாரிவாக்கம், கொள்ளாபுரியம்மன் கோயில் தெரு, எண்.16 என்ற விலாசத்தில் அமைந்துள்ள Padmashree Granites (TVR-URF) என்ற தொழிற்சாலையின் உரிமையாளர் மற்றும் மேலாளர் என்றும், கடந்த 04.06.2022 அன்று பிற்பகல் 01.00 மணியளவில் மேற்படி தொழிற்சாலையை திருவள்ளூர் தொழிலக பாதுகாப்பு மற்றும் சுகாதார இணை இயக்குநர், அவர்கள் ஆய்வு செய்தபோது, மேற்படி தொழிற்சாலையில் வருகை பதிவேடு மற்றும் சம்பளப்பதிவேடு படிவம் எண்.3ல் பராமரிக்கப்படவில்லை என்றும், ஆய்வின்போது கேட்டும் காண்பிக்கப்படவில்லை என்றும், எனவே மேற்கண்ட தொழிற்சாலையின் உரிமையாளர் மற்றும் மேலாளரான எதிரி மீது தொழிலாளர் சட்டம் நிறுவனங்களின் வருமானம் மற்றும் பதிவேடுகளை பராமரிப்பதற்கான நடைமுறைகளை எளிமைப்படுத்துதல்) சட்டம் 1988 பிரிவு 4(1)(b)(i) உ/இ.பிரிவு 6 படிக்கு தண்டிக்கப்படக்கூடிய குற்றம் செய்திருப்பதாக குறிப்பிட்டு குற்ற முறையீட்டாளர் இந்த குற்ற அறிக்கையை தாக்கல் செய்திருக்கிறார்.

2. எதிரி இந்நீதிமன்றம் ஆஜரானபோது கு.வி.மு.ச. பிரிவு 207ன்

R VELARAS Digitally signed by R VELARAS Date: 2023.08.08 16:47:27 +0530

கீழ் அவருக்கு இவ்வழக்கு ஆவணங்களின் நகல்கள் அனைத்தும் கொடுத்து, எதிரி மீதான தொழிலாளர் சட்டம் நிறுவனங்களின் வருமானம் மற்றும் பதிவேடுகளை பராமரிப்பதற்கான நடைமுறைகளை எளிமைப்படுத்துதல்) சட்டம் 1988 பிரிவு 4(1)(b)(i) உ/இ.பிரிவு 6 படிக்கான குற்றம் குறித்து விளக்கி கூறி அது குறித்து வினவியபோது, எதிரி புகார்தாரர் / அரசுத் தரப்பில் தன்மீது சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டை பொய் குற்றச்சாட்டு என மறுத்தார். எதிரியின் குற்ற மறுப்பினை தொடர்ந்து, புகார்தாரர் / அரசுதரப்பு சாட்சிகளின் விசாரணைக்கு உத்திரவிடப்பட்டது.

3. புகார்தாரர் / அரசு தரப்பில் குற்றமுறையீட்டாளர் அ.சா.1 ஆக விசாரிக்கப்பட்டு, அ.த.சா.ஆ.1 முதல் அ.த.சா.ஆ.7 வரையிலான சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது.

**4. புகார்தாரர் / அரசு தரப்பில் விசாரிக்கப்பட்ட சாட்சியின் வாயிலாக எழும் அரசு தரப்பு வழக்கின் சுருக்கமாவது:**

(i) **அ.சா.1 இளவரசன்** தனது சாட்சியத்தில், தான் தற்போது தொழிலக பாதுகாப்பு மற்றும் சுகாதார துணை இயக்குனர் அலுவலகம், அம்பத்தூர், சென்னை, துணை இயக்குனராக பணிபுரிந்து வருவதாகவும், கடந்த 2022ம் ஆண்டு ஜுன் மாதம் திருவள்ளூர் தொழிலக பாதுகாப்பு மற்றும் சுகாதார துணை இயக்குனர் அலுவலகத்தில் உதவி இயக்குனராக பணிபுரிந்து

R VELARAS Digitally signed by R VELARAS Date: 2023.08.08 16:47:33 +0530

வந்ததாகவும், 04.06.2022 அன்று பிற்பகல் 1 மணியளவில் Padmashree Granites, (TVR-URF), No.16, Kollabriamman Koil Street, Parivakkam, Chennai-600056 என்ற முகவரியில் அமைந்துள்ள தொழிற்சாலை பதிவு செய்யப்படாத தொழிற்சாலையாகும் என்றும், மேற்படி தொழிற்சாலையை 04.06.2022 அன்று தான் புகாராய்வு செய்ததாகவும், தனது ஆய்வின்போது இந்த தொழிற்சாலையில் உரிமையாளர் மற்றும் மேலாளரான சிட்டிபாபு வெங்கடேசன் என்பவர் இருந்தார் என்றும், தனது ஆய்வின்போது தொழிற்சாலையில் காணப்பட்ட முரண்பாடுகள் சம்மந்தமாக ஒரு ஆய்வறிக்கை தயார் செய்ததாகவும், மேற்படி ஆய்வில் தன்னால் கண்டறியப்பட்ட முரண்பாடுகளுக்கு காரணம் கோரும் அறிவிப்பு 22.06.2022 அன்று எதிரிக்கு வழங்கப்பட்டதாகவும், வழங்கப்பட்ட காரணம் கோரும் அறிவிப்பிற்கு எதிரியிடமிருந்து எவ்வித பதிலும் பெறப்படவில்லை என்றும், மேலும், உரிமையாளர் மற்றும் மேலாளருக்கு எதிராக வழக்கு தொடர்வதற்கு முன்அனுமதி கடிதம் 12.08.2022 அன்று கூடுதல் இயக்குனர், தொழிலக பாதுகாப்பு மற்றும் சுகாதாரம், சென்னை அவர்களுக்கு அனுப்பியதாகவும், வழக்கு தொடர அனுமதி கடிதம் 23.08.2022 அன்று பெறப்பட்டதாகவும், எதிரி Labour Laws (Simplification of Procedure for furnishing returns and maintaining Registers by certain Establishment) Act 1988 பிரிவு 4(1)(b)(i) r/w Section 6-ன் படி எதிரி தண்டிக்கப்படக்கூடிய குற்றம்

R VELARAS
Digitally signed by R VELARAS
Date: 2023.08.08 16:47:38 +0530

புரிந்துள்ளார் என்றும், அதனால் தொழிற்சாலைகள் சட்டம் 1948 மற்றும் தமிழ்நாடு தொழிற்சாலை விதிகள் 1950-ன் கீழ் பிரிவு 44(1)-ன் கீழ் இந்நீதிமன்றத்தில் 25.08.2022 அன்று குற்றப்பத்திரிக்கை தாக்கல் செய்ததாகவும், எதிரி தொழிற்சாலையின் மீது முதலமைச்சருக்கு அனுப்பி வைக்கப்பட்டிருந்த புகார் **அ.த.சா.ஆ.1** என்றும், தொழிலக பாதுகாப்பு மற்றும் சுகாதார இயக்குனர் அலுவலகத்திலிருந்து தங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்ட கடிதம் **அ.த.சா.ஆ.2** என்றும், ஆய்வறிக்கை **அ.த.சா.ஆ.3** என்றும், எதிரிக்கு அனுப்பபப்பட்ட காரணம் கோரும் அறிவிப்பு **அ.த.சா.ஆ.4** என்றும், மேற்படி அறிவிப்பை எதிரி பெற்றுக்கொண்டதற்கான அஞ்சல் ஒப்புகை அட்டை **அ.த.சா.ஆ.5** என்றும், எதிரிக்கு எதிராக வழக்கு தாக்கல் செய்வதற்கு கூடுதல் இயக்குனர் அலுவலகத்திற்கு தன்னால் அனுப்பிவைக்கப்பட்ட முன் அனுமதி கடிதம் **அ.த.சா.ஆ.6** என்றும், கூடுதல் இயக்குனர் அலுவலகத்திலிருந்து எங்களுக்கு அனுப்பிவைக்கப்பட்ட இசைவாணை **அ.த.சா.ஆ.7** என்றும் சாட்சியம் அளித்துள்ளார்.

5. அ.சா.1-ன் சாட்சிய சங்கதிகளில் இருந்து எதிரிக்கு பாதகமான சாட்சிய சங்கதிகள் குறித்து எதிரியிடம் குவிமுச பிரிவு 313(1)(ஆ)ன் கீழ் வினவியபோது எதிரி புகார்தாரர் / அரசுத்தரப்பு சாட்சியத்தை பொய் என்றும், மேற்படி வழக்கு பொய்வழக்கு என்றும் என்றும், எதிரி தரப்பில் விசாரிக்க

Digitally signed by R VELARAS Date: 2023.08.08 16:47:44 +0530
R VELARAS

சாட்சிகள் இல்லை என்று 05.08.2023 அன்று முடித்துக் கொண்டார். சான்றாவணங்களும் ஏதும் குறியீடு செய்யப்படவில்லை. பின்னர், இரு தரப்பு வாதமும் கேட்கப்பட்டது.

6. தற்போது இவ்வழக்கில் எதிரி மீது சுமத்தப்பட்டுள்ள தொழிலாளர் சட்டம் நிறுவனங்களின் வருமானம் மற்றும் பதிவேடுகளை பராமரிப்பதற்கான நடைமுறைகளை எளிமைப்படுத்துதல்) சட்டம் 1988 பிரிவு 4(1)(b)(i) உ/இ.பிரிவு 6 படிக்கான குற்றச்சாட்டு புகார்தாரர் / அரசுதரப்பில் சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபிக்கப்பட்டுள்ளதா? என்பதை காண்பதே தீர்வுக்குரிய பிரச்சனையாகும்.

**<u>7. தீர்வு :</u>**

இந்த வழக்கானது திருவள்ளூர் தொழிலக பாதுகாப்பு மற்றும் சுகாதார உதவி இயக்குநர் அவர்களால் தனி புகாராக எதிரியின் மீது தாக்கல் செய்யப்பட்டு கோப்பிற்கு எடுக்கப்பட்டுள்ளது. மேற்படி வழக்கில் அ.சா.1 ஆக விசாரிக்கப்பட்ட புகார்தாரர் இளவரசன் தன்னுடைய சாட்சியத்திலும் தனது புகாரிலும், கடந்த 04.06.2022 அன்று பிற்பகல் 01.00 மணியளவில் Padmashree Granites என்ற தொழிற்சாலையை புகாராய்வு செய்ததாகவும், ஆய்வின்போது தொழிற்சாலையின் உரிமையாளர் மற்றும் மேலாளரான எதிரி சிட்டிபாபு என்பவர் உடனிருந்தார் என்றும், ஆய்வின்போது காணப்பட்ட முரண்பாடுகள் சம்மந்தமாக

R VELARAS Digitally signed by R VELARAS Date: 2023.08.08 16:47:49 +0530

ஒரு ஆய்வறிக்கை தயார் செய்த மேற்கண்ட முரண்பாடுகளுக்கு காரணம் கோரும் அறிவிப்பு 22.06.2022 அன்று எதிரிக்கு வழங்கப்பட்டதாகவும், எதிரியிடமிருந்து பதிலும் பெறப்படாததால் உரிமையாளர் மற்றும் மேலாளரான எதிரிக்கு எதிராக வழக்கு தொடர்வதற்கு முன் அனுமதி கடிதத்தை 12.08.2022 அன்று தொழிலக பாதுகாப்பு மற்றும் சுகாதார கூடுதல் இயக்குநர் அவர்களுக்கு அனுப்பி வைத்ததாகவும், மேற்படி எதிரி மீது வழக்கு தொடர 23.08.2022 அன்று அனுமதி கடிதம் பெறப்பட்டதாகவும், எனவே எதிரி தொழிலாளர் சட்டம் நிறுவனங்களின் வருமானம் மற்றும் பதிவேடுகளை பராமரிப்பதற்கான நடைமுறைகளை எளிமைப்படுத்துதல்) சட்டம் 1988 பிரிவு 4(1)(b)(i) உ/இ.பிரிவு 6 ன் படிக்கு தண்டிக்கப்படவேண்டிய நபர் என்றும், மேற்படி எதிரி தொழிற்சாலையின் மீது முதலமைச்சருக்கு அனுப்பி வைக்கப்பட்டிருந்த புகார் அ.த.சா.ஆ.1 என்றும், தொழிலக பாதுகாப்பு சுகாதார இயக்குனர் அலுவலகத்திலிருந்து தங்களுக்கு அ.த.சா.ஆ.2 கடிதம் அனுப்பி வைக்கப்பட்டதாகவும், ஆய்வறிக்கை அ.த.சா.ஆ.3 என்றும், எதிரிக்கு அனுப்பப்பட்ட காரணம் கோரும் அறிவிப்பு அ.த.சா.ஆ.4 என்றும், மேற்படி அறிவிப்பை எதிரி பெற்றுக்கொண்டதற்கான அஞ்சல் ஒப்புகை அட்டை அ.த.சா.ஆ.5 என்றும், எதிரிக்கு எதிராக வழக்கு தாக்கல் செய்வதற்கு கூடுதல் இயக்குனர் அலுவலகத்திற்கு தன்னால் அனுப்பிவைக்கப்பட்ட முன்

R VELARAS
Digitally signed by R VELARAS
Date: 2023.08.08 16:47:55 +0530

அனுமதி கடிதம் அ.த.சா.ஆ.6 என்றும், கூடுதல் இயக்குனர் அலுவலகத்திலிருந்து தங்களுக்கு அனுப்பிவைக்கப்பட்ட இசைவாணை அ.த.சா.ஆ.7 என்றும் சாட்சியம் அளித்துள்ளார்.

8. மேற்படி அ.சா.1-ஐ எதிரியின் தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்பட்டபோது, எதிரி தொழிற்சாலையில் பணிபுரிந்த தொழிலாளர்களின் பெயர்களை ஆய்வறிக்கையில் குறிப்பிடவில்லை என்றும், மேற்படி தொழிலாளர்களில் குழந்தை தொழிலாளர்கள் யாரும் இல்லை என்றும் ஏற்றுக்கொண்டு சாட்சியம் அளித்துள்ளார். மேற்படி தொழிற்சாலையில் 11 தொழிலாளர்கள் பணிபுரியவில்லை என்றும் சுமார் 4, 5 தொழிலாளர்கள் மட்டுமே பணிபுரிந்து வருவதாகவும் கேட்கப்பட்ட கேள்விக்கு அ.சா.1 தெளிவாக மறுத்து சாட்சியம் அளித்துள்ளார். மேற்படி தொழிற்சாலை மீது முதலமைச்சருக்கு புகார் அனுப்பி வைக்கப்பட்டிருந்தது என்றும், மேற்படி புகார் அ.த.சா.ஆ.1 என்றும் அந்த புகாரை அனுசரித்து ஆய்வு மேற்கொள்ள வேண்டி தொழிலக பாதுகாப்பு மற்றும் சுகாதார இயக்குநர் அலுவலகத்திலிருந்து அ.த.சா.ஆ.2 கடிதம் தனக்கு அனுப்பபட்டவுடன் மேற்படி எதிரி தொழிற்சாலையை கடந்த 04.06.2022 அன்று பிற்பகல் 1.00 மணியளவில் தான் மட்டும் சென்று ஆய்வு மேற்கொண்டதாகவும், மேற்படி ஆய்வில் கண்டறியப்பட்ட முரண்பாடுகளை பொறுத்து அ.த.சா.ஆ.3 ஆய்வறிக்கையை தயார் செய்ததாகவும் சாட்சியம் அளித்துள்ளார். மேற்படி

R VELARAS Digitally signed by R VELARAS Date: 2023.08.08 16:48:00 +0530

ஆய்வறிக்கை சம்மந்தமாக அ.சா.1ஐ எதிரியின் தரப்பில் குறுக்கு விசாரணை செய்தபோது அந்த ஆய்வறிக்கை அ.சா.1ன் அலுவலகத்தில் வைத்து தயார் செய்யப்படவில்லை என்றும், எதிரியின் தொழிற்சாலையில் வைத்துதான் தயார் செய்யப்பட்டது என்றும், ஒவ்வொரு முரண்பாட்டையும் கண்டறிந்தவுடன் அதனை தன்னுடைய ஆய்வறிக்கையில் பதிவு செய்ததாகவும் தன்னுடைய ஆய்வின்போது மேற்படி தொழிற்சாலையின் உரிமையாளர் மற்றும் மேலாளரான எதிரியும் உடனிருந்தார் என்றும் தெளிவாக தெரிவித்துள்ளார். மேற்படி ஆய்வின்போது எதிரி தொழிற்சாலையில் பணிபுரியும் தொழிலாளர்களின் வருகை பதிவேடு மற்றும் சம்பளப்பதிவேடு பராமரிக்கப்படவில்லை என்றும் எனவே மேற்படி எதிரி தொழிலாளர் சட்டம் நிறுவனங்களின் வருமானம் மற்றும் பதிவேடுகளை பராமரிப்பதற்கான நடைமுறைகளை எளிமைப்படுத்துதல்) சட்டம் 1988 பிரிவு 4(1)(b)(i) உ/இ.பிரிவு 6 படிக்கு தண்டிக்கப்படவேண்டிய குற்றம் புரிந்துள்ளதாக சாட்சியம் அளித்துள்ளதோடு மேற்படி முரண்பாடுகளையும் இதர முரண்பாடுகளையும் சுட்டிக்காட்டி எதிரிக்கு கடந்த 22.06.2022 தேதியிட்டு அ.த.சா.ஆ.4 காரணம் கோரும் அறிவிப்பை எதிரிக்கு அனுப்பியுள்ளார். மேற்படி காரணம் கோரும் அறிவிப்பை அ.த.சா.ஆ.5 ஆவணத்தின் அடிப்படைக்கு பெற்றுக்கொண்ட எதிரி எவ்விதமான பதிலோ மறுப்போ தெரிவிக்கவில்லை. அதன் காரணமாக மேற்படி காரணம் கோரும் அறிக்கையை

R VELARAS
Digitally signed by R VELARAS
Date: 2023.08.08 16:48:06 +0530

பெற்றுக்கொண்ட பிறகும் எதிரி எவ்வித மறுப்பும் பதிலும் தெரிவிக்காததை குறிப்பிட்டு 12.08.2022 தேதியிட்டு மேல்நடவடிக்கை கடிதமான அ.த.சா.ஆ.6ஐ எதிரிக்கு அ.சா.1 அனுப்பி வைத்துள்ளார். அதன்பிறகும் எதிரி எவ்விதமான பதிலும் மறுப்பும் தெரிவிக்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கதாக உள்ளது. எனவே, அ.சா.1 கடந்த 04.06.2022 அன்று எதிரி முன்னிலையில் எதிரியின் தொழிற்சாலையை ஆய்வு செய்து கண்டறிந்த முரண்பாடுகளுக்காக இவ்வழக்கையும் மற்றொரு வழக்கையும் தாக்கல் செய்து நடவடிக்கை எடுத்துள்ள காரணத்தினால், மேற்படி அ.சா.1ஐ எதிரியின் தரப்பில் குறுக்கு விசாரணை செய்தபோது எதிரி தொழிற்சாலையில் 4, 5 தொழிலாளர்கள் மட்டுமே பணிபுரிந்து வருகிறார்கள் என்றும், எதிரி தொழிற்சாலையை தொழிற்சாலைகள் சட்டப்படி பதிவு செய்யவேண்டிய அவசியம் இல்லை என்றும், அ.சா.1 தொழிற்சாலையில் பணிபுரிந்து வந்த தொழிலாளர்களை விசாரிக்கவில்லை என்ற காரணத்தினாலும், அவர்களின் பெயர்களை குறிப்பிடவில்லை என்ற காரணத்தினாலும், மேற்படி தொழிலாளர்கள் ஒப்பந்த தொழிலாளர்களா அல்லது எதிரியின் தொழிற்சாலையில் நிரந்தரமாக பணிபுரியும் தொழிலாளர்களா என்பது அ.சா.1க்கு தெரியாது என்ற காரணத்தினாலும் இவ்வழக்கை தள்ளுபடி செய்து எதிரியை இவ்வழக்கிலிருந்து விடுதலை செய்ய வேண்டும் என்று எதிரியின் தரப்பில் தெரிவிக்கப்படும் வாதம் ஏற்புடையதல்ல.

R VELARAS Digitally signed by R VELARAS Date: 2023.08.08 16:48:11 +0530

9. உண்மையிலேயே எதிரி தொழிற்சாலையில் கடந்த 04.06.2022 அன்று அ.சா.1 கண்டறிந்ததாக சொல்லும் முரண்பாடுகள் தவறானது என்று எதிரி கருதியிருந்தால் அ.த.சா.ஆ.4 காரணம் கோரும் அறிவிப்பு எதிரிக்கு சார்வு செய்யப்பட்டவுடன் அதனை மறுத்து உரிய பதில் கடிதத்தை அ.சா.1க்கு அனுப்பி வைத்திருப்பார். ஆனால் மேற்படி பதிலோ மறுப்போ அப்போது தெரிவிக்காத எதிரி தற்போது இவ்வழக்கிலிருந்து எவ்வகையிலேனும் தன்னை விடுவித்து கொள்ளவேண்டும் என்பதற்காகவும், தப்பித்துகொள்ள வேண்டும் என்பதற்காகவும் மட்டுமே இதுபோன்ற ஒரு எதிர்வாதத்தை செய்து வருகிறார் என்பது தெரியவருகிறது. மேலும், அ.சா.1 தன்னுடைய வழக்கிலும் முதல் விசாரணை சாட்சியத்திலும் குறுக்கு விசாரணை சாட்சியத்திலும் எதிரியின் தொழிற்சாலையில் இவ்வழக்கில் சொல்லப்பட்டுள்ள முரண்பாடுகளும் இதர முரண்பாடுகளும் தன்னால் கண்டறியப்பட்டது என்றும், மேற்படி முரண்பாடுகள் அ.த.சா.ஆ.3 ஆய்வறிக்கையில் தன்னால் பதிவு செய்யப்பட்டுள்ளது என்றும் குறிப்பிட்ட வகையில் கட்சி செய்து வந்தபோதிலும் அதனை மறுத்தளிக்கும் விதமாக எதிரியின் தரப்பில் யாதொரு வாய்மொழி மற்றும் ஆவண சாட்சியங்களும் முன்னிடப்படவில்லை என்பதை பார்க்கும்போது எதிரி இவ்வழக்கு முரண்பாடுகளையும் இதர முரண்பாடுகளையும் மறைமுகமாக ஏற்றுக்கொண்டுள்ளார் என்பதை தெரிந்தகொள்ள முடிகின்றது. எனவே,

R VELARAS Digitally signed by R VELARAS Date: 2023.08.08 16:48:17 +0530

இவ்வழக்கில் சொல்லப்பட்டுள்ள முரண்பாடுகள் அ.சா.1ன் ஆய்வு தேதியான 04.06.2022 அன்று இருந்துள்ளது என்பதை தெரிந்துகொள்ள முடிகின்றது.

10. எனவே, எதிரியின் தரப்பில் அ.சா.1ஐ குறுக்கு விசாரணை செய்தபோது அ.சா.1 ஆல் தெரிவிக்கப்பட்ட சங்கதிகளை அனுசரணையாக கொண்டு இவ்வழக்கில் சொல்லப்பட்டுள்ள முரண்பாடுகளை எதிரி புரியவில்லை என்று எதிரியின் தரப்பில் தெரிவிக்கப்படும் வாதம் ஏற்புடையதல்ல.

11. மேற்படி தொழிற்சாலையை தொழிற்சாலைகள் சட்டம் மற்றும் தமிழ்நாடு தொழிற்சாலைகள் விதிகளில் சொல்லப்பட்டுள்ள நிபந்தனைகளுக்கு உட்பட்டு நடத்த வேண்டிய கடமை மேற்படி தொழிற்சாலையின் உரிமையாளருக்கும் மேற்படி தொழிற்சாலையின் மேலாளருக்கும் உள்ளது. ஆனால் மேற்படி விதிகளில் சொல்லப்பட்டுள்ள நிபந்தனைகளை பூர்த்தி செய்யாமல் முரண்பாடுகளுடன் தொழிற்சாலையை செயல்படுத்துவதற்கு அனுமதிக்க இயலாது என்ற நிலையில் மேற்படி முரண்பாடுகளுக்காக அ.சா.1 தகுந்த நடவடிக்கையை மேற்கொண்டுள்ளார் என்று புகார்தாரர் / அரசு தரப்பில் தெரிவிக்கப்படும் வாதம் ஏற்புடையதாக உள்ளது.

12. இந்த சூழ்நிலையில், அ.சா.1ன் சாட்சியம் மற்றும் அரசுத் தரப்பில் சமர்ப்பிக்கப்பட்டுள்ள அ.த.சா.ஆ.1 முதல் அ.த.சா.ஆ.7 வரையிலான ஆவணங்களின் அடிப்படையில் 04.06.2022 அன்று ஆய்வின்போது மேற்படி

R VELARAS Digitally signed by R VELARAS Date: 2023.08.08 16:48:22 +0530

அ.சா.1 இவ்வழக்கில் குறிப்பிட்டுள்ள முரண்பாடுகளை கண்டறிந்துள்ளார் என்பதும், அதற்காகத்தான் இந்த தனிப்புகாரை தாக்கல் செய்து நடவடிக்கை எடுத்துள்ளார் என்பதும் நிரூபணம் ஆகின்றது.

13. முடிவில், எதிரியை தொழிலாளர் சட்டம் நிறுவனங்களின் வருமானம் மற்றும் பதிவேடுகளை பராமரிப்பதற்கான நடைமுறைகளை எளிமைப்படுத்துதல்) சட்டம் 1988 பிரிவு 4(1)(b)(i) உ/இ.பிரிவு 6 படிக்கான குற்றத்திற்கு கு.வி.மு.ச.255(2) பிரிவின் கீழ் குற்றவாளி என தீர்மானித்து, எதிரிக்கு தொழிலாளர் சட்டம் நிறுவனங்களின் வருமானம் மற்றும் பதிவேடுகளை பராமரிப்பதற்கான நடைமுறைகளை எளிமைப்படுத்துதல்) சட்டம் 1988 பிரிவு 4(1)(b)(i) உ/இ.பிரிவு 6 படிக்கான குற்றத்திற்கு **ரூ.5000/-** அபராதமும், அபராதம் கட்டத் தவறினால் **மூன்று** மாதகாலம் மெய்க்காவல் சிறைத்தண்டனை விதித்து இந்நீதிமன்றம் தீர்ப்பளிக்கின்றது.

14. இவ்வழக்கில் சொத்துக்கள் எதுவும் இல்லை உத்தரவிற்கு.

இந்த தீர்ப்புரை என்னால் சுருக்கெழுத்தருக்கு நேரிடையாக சொல்லப்பட்டு, அவரால் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழைகள் நீக்கம் செய்யப்பட்டு, 2023ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 08ஆம் நாள் அவையறிய பகரப்பட்டது.

R VELARAS
Digitally signed by R VELARAS
Date: 2023.08.08 16:48:27 +0530

தேதி: 08.08.2023

**தலைமை நீதித்துறை நடுவர்**
திருவள்ளூர்

**<u>பின் இணைப்பு:</u>**

**<u>அரசுத்தரப்பு சாட்சிகள்:</u>**

| **சாட்சி எண்** | **சாட்சியின் பெயர்** |
|---|---|
| அ.சா.1 | **திரு.எஸ். இளவரசன்,** துணை இயக்குநர், தொழிலக பாதுகாப்பு மற்றும் சுகாதார துணை இயக்குநரக அலுவலகம், அம்பத்தூர், சென்னை. |

**<u>அரசு தரப்பு சான்றாவணங்கள்:</u>**

| | | |
|---|---|---|
| அ.த.சா.ஆ.1 | | எதிரி தொழிற்சாலையின் மீது முதலமைச்சருக்கு அனுப்பி வைக்கப்பட்டிருந்த புகார் |
| அ.த.சா.ஆ.2 | 05.05.2022 | சென்னை, தொழிலக பாதுகாப்பு மற்றும் சுகாதார இயக்குநர் அலுவலகத்திலிருந்து திருவள்ளூர், தொழிலக பாதுகாப்பு மற்றும் சுகாதார இணை இயக்குநருக்கு அனுப்பி வைக்கப்பட்ட கடிதம் |
| அ.த.சா.ஆ.3 | 06.04.2022 | ஆய்வறிக்கை |
| அ.த.சா.ஆ.4 | 22.06.2022 | எதிரிக்கு அனுப்பபட்ட காரணம் கோரும் அறிவிப்பு |
| அ.த.சா.ஆ.5 | | அஞ்சல் ஒப்புகை அட்டை |
| அ.த.சா.ஆ.6 | 12.08.2022 | மேல்நடவடிக்கை கடிதம் |
| அ.த.சா.ஆ.7 | 23.08.2022 | எதிரி மீது வழக்கு தொடர வழங்கப்பட்ட இசைவாணை |

**<u>அரசு தரப்பு சான்றுப்பொருட்கள்:</u>** இல்லை

**<u>எதிரி தரப்பு சாட்சிகள் :</u>** இல்லை

**<u>எதிரி தரப்பு சான்றாவணங்கள் :</u>** இல்லை

R VELARAS
Digitally signed by R VELARAS
Date: 2023.08.08 16:48:34 +0530

தேதி: 08.08.2023

**தலைமை நீதித்துறை நடுவர்**
திருவள்ளூர்

**<u>எதிரி தரப்பு சான்றுப் பொருட்கள்:</u>** இல்லை

## <u>வழக்கு விவரக் குறிப்பு (*Case Summary*)</u>

| | | |
|---|---|---|
| 1 | எதிரி சிறையில் இருந்த காலம் | - |
| 2 | குற்ற முறையீடு தாக்கல் செய்யப்பட்ட நாள் | 25.08.2022 |
| 3 | எதிரி மீது குற்றச்சாட்டு சுமத்தப்பட்டு, கு.வி.மு.ச பிரிவு 251ன் கீழ் குற்றச்சாட்டு வினவப்பட்ட தேதி | 05.05.2023 |
| 4 | எதிரி தரப்பில் கு.வி.மு.ச. பிரிவு 239ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்ட தேதி மற்றும் அதன் உத்தரவு நாள் மற்றும் உத்தரவின் விவரம் | - |
| 5 | அரசு தரப்பு சாட்சியங்களை முதல் மற்றும் குறுக்கு விசாரணை செய்யப்பட்ட நாட்கள் அ.சா.1 | முதல் விசாரணை 02/08/2023 குறுக்கு விசாரணை 02/08/2023 |
| 6 | எதிரி மீது கு.வி.மு.ச பிரிவு 313(1)(b)ன் கீழ் வினவப்பட்ட தேதி | 05.08.2023 |
| 7 | எதிரி தலைமறைவாகி நீதிமன்றத்தில் சரண்டரான / ஆஜர்படுத்தப்பட்ட தேதி | - |
| 8 | மேல்நீதிமன்றத்தின் தடை உத்தரவு மற்றும் அதன் முடிவு | - |

R VELARAS Digitally signed by R VELARAS Date: 2023.08.08 16:48:40 +0530

தேதி: 08.08.2023

**தலைமை நீதித்துறை நடுவர்**

திருவள்ளூர்